டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 30.8.2024 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 061 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# வேளாண் கட்டமைப்பு நிதியம் என்ற மத்திய அரசுத் துறைத் திட்டம் படிப்படியாக விரிவுபடுத்த

## மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புது தில்லி, ஆக.29

பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்று நடைபெற்ற மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில், 'வேளாண் கட்டமைப்பு நிதியம்' என்ற திட்டத்தின் கீழ், மத்திய அரசுத் துறையின் நிதித் திட்டத்தை, மேலும் ஈர்ப்புடையதாகவும், தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும், அனைவரையும் உள்ளடக்கியதாகவும் மாற்றும் வகையில் விரிவுபடுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.



நாட்டில் வேளாண் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும், வேளாண் சமூகத்திற்கு ஆதரவளிப்பதற்கும் ஒரு குறிப்பிடத்தக்க நடவடிக்கையாக, வேளாண் உள் கட்டமைப்பு நிதி திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்கான தொடர்ச்சியான நடவடிக்கைகளை அரசு அறிவித்துள்ளது. இந்த முயற்சிகள் தகுதியான திட்டங்களின் நோக்கத்தை விரிவு படுத்துவதையும், வலுவான வேளாண் உள்கட்டமைப்பு சூழல் அமைப்பை வளர்ப்பதற்கான கூடுதல் ஆதரவு நடவடிக்கை களை ஒருங்கிணைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

சாத்தியமான வேளாண் சொத்துக்கள்: 'சமூக வேளாண் சொத்துக்களை உருவாக்குவதற்கான சாத்தியமான திட்டங் களின்' கீழ் உள்கட்டமைப்பை உருவாக்குவதற்கான திட்டத்தின் தகுதியான அனைத்து பயனாளிகளையும் அனுமதித்தல். இந்த நடவடிக்கை சமூக வேளாண் திறன்களை மேம்படுத்தும் சாத்தியமான திட்டங்களின் வளர்ச்சிக்கு உதவும் என்று எதிர் பார்க்கப்படுகிறது, இதன் மூலம் துறையில் உற்பத்தித்திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துகிறது.

2020-ம் ஆண்டில் பிரதமரால் தொடங்கப்பட்டதிலிருந்து, 6623 கிடங்குகள், 688 குளிர்பதன கிடங்குகள் உருவாக்கு வதில் வேளாண் கட்டமைப்பு நிதியம் 26 முக்கியப் பங்கு வகித்துள்ளது. இதன் விளைவாக நாட்டில் சுமார் 500 லட்சம் மெட்ரிக் டன் கூடுதல் சேமிப்பு திறன் உள்ளது. இதில் 465 எல்எம்டி உலர் சேமிப்பு மற்றும் 35 எல்எம்டி குளிர் சேமிப்பு திறன் ஆகியவை அடங்கும். இந்த கூடுதல் சேமிப்பு திறன் மூலம் ஆண்டுக்கு 18.6 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானியங் களையும், 3.44 லட்சம் மெட்ரிக் டன் தோட்டக்கலை விளை பொருட்களையும் சேமிக்க முடியும். இதுவரை 74,508 திட்டங்களுக்கு ரூ.47,575 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இந்த அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் வேளாண் துறையில் ரூ.78,596 கோடி முதலீட்டைத் திரட்டியுள்ளன. இதில் ரூ.78,433 கோடி தனியார் நிறுவனங்களிடமிருந்து திரட்டப் பட்டுள்ளது. மேலும், வேளாண் கட்டமைப்பு நிதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட உள்கட்டமைப்புத் திட்டங்கள் வேளாண் துறையில் 8.19 லட்சத்துக்கும் அதிகமான கிராமப்புற வேலை வாய்ப்புகளை உருவாக்க உதவியுள்ளன.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தரமான விதை உற்பத்திகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஆக.29

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் 29.8.24 அன்று கட்டதேவன்பட்டி கிராமத்தில் தரமான விதை உற்பத்திகள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி நடை பெற்றது. மதுரை, வேளாண்மை இணை இயக்குநர் P.சுப்புராஜ் மற்றும் NFSM திட்ட ஆலோசகர் த.விவேகானந்தன் ஆகியோர் பயிற்சியினை துவக்கி வைத்து மாவட்ட துறை சார்ந்த மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்கள். 2024-25ம் ஆண்டு துறையின் சிறப்பு திட்டமான முதல்வரின் 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டத்தின் கூறுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். விதைச்சான்று மற்றும் உயிர்மச் சான்று உதவி இயக்குநர் சி.சிங்காரலீனா, விவசாயி களுக்கு தரமான விதை உற்பத்தி செய்து சான்று பெறுவது குறித்தும் விதைப்பண்ணை பதிவு கட்டணங்கள், பருவத்திற் கேற்ற இரகங்கள் குறித்த விழிப்புணர்வு, விதைச்சான்றளிப்பு நடைமுறைகள் மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த திட்டங்கள் மற்றும் அங்கக வேளாண்மையில் சான்று பெறும் வழி முறைகள் குறித்தும் எடுத்துரைத்தார். செல்லம்பட்டி, வேளாண்மை உதவி இயக்குநர் வெ.செல்வராஜ், வட்டாரத்தில் உள்ள இடுபொருட்கள் குறித்து விபரங்கள் தெரிவித்தார். இப்பயிற்சியில் விதைப்பண்ணை பதிவு செய்தல் முதல் விதை அறுவடை வரை உள்ள தொழில் நுட்பங்களை விஜய் குமார், விதைச்சான்று அலுவலர், செல்லம்பட்டி, விளக்கினார். இளங்கோ, உதவி விதை அலுவலர், செல்லம்பட்டி விதை பண்ணை பதிவு விபரங்கள் குறித்து எடுத்துரைத்தார். த.சண்முகப்பிரியா, வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மற்றும் உதவி வட்டார தொழில் நுட்ப மேலாளர்கள் இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# விதை உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு பயிற்சி



விருதுநகர், ஆக.29

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மதுரை தேசிய விதை கழகம் இணைந்து அருப்புக் கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விதை உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை முனைவர் செல்வி ரமேஷ் திட்ட ஒருங்கிணைப் பாளர் வேளாண்மை அறிவியல் நிலையம் தலைமை தாங்கி, தரமான விதைகளே விவசாயத்தின் மூலதனம், விதை உற்பத்தி செய்தால் ஒரு கிலோ விதைக்கு குறைந்த பட்சம் 25 ரூபாய் கூடுதலாக கிடைக்கும் என்று கூறினார். மேலும் விவசாயிகள் விதை உற்பத்தியாளர்களாக மாற வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். தொடர்ந்து மருத்துவர் பழனிச்சாமி பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை மருத்துவ பயிற்சி மையம், இராஜபாளையம், கால்நடை வளர்ப்பு, மாநில மற்றும் மத்திய அரசு திட்டங்கள் பற்றி தெளிவாக எடுத்துக்கூறினார்.

கணேஷ்குமார், மேற்பார்வையாளர், அருப்புக்கோட்டை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், இ -நாம்-ன் முக்கியத் துவத்தை பற்றி விளக்கினார். தேசிய விதை கழக செயல் பாடுகளை ஆதர்ஷ் பகுதி மேலாளர் எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் அதிக மகசூல் தரும் இரகங்கள், தரமான விதை உற்பத்தி மற்றும் சான்றளிப்பு, தோட்டக்கலை பயிர்கள் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மற்றும் உணவு மதிப்புக்கூட்டுதல் பற்றி தொழில்நுட்ப உரைகளை அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் வழங்கினார்கள். நிறைவாக சௌந்தர்யா, விற்பனை அலுவலர், தேசிய விதை கழகம், மதுரை நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் விதை உற்பத்தியாளர்கள், விதை விற்பனையாளர்கள் மற்றும் விவசாயிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | | 29.08.2024 |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 25 | 30 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 30 | 34 | 57 | உருளை (பிற) | 36 | 42 |
| 1B | கத்திரி(Nadu) | 50 | 55 | 57A | உருளை(ஊட்டி) | 55 | 60 |
| 2 | வெண்டை | 22 | 26 | 58 | மேரக்காய் | 20 | 25 |
| 3 | தக்காளி (நாடு) | 13 | 16 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 28 | 32 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 13 | 16 | 60 | கேரட் | 90 | 95 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 50 | 54 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 40 | 45 |
| 6 | புடலை | 22 | 26 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 22 | 28 | 63 | டர்னிப் | 25 | 30 |
| 8 | சுரைக்காய் | 18 | 22 | 64 | மு.கோஸ் | 30 | 35 |
| 9 | பாகற்காய் | 30 | 34 | 65 | மு.கோஸ்(கலர்) | 25 | 30 |
| 10 | கொத்தவரை | 25 | 30 | 66 | காலிபிளவர் | 42 | 46 |
| 11 | பூசணி | 18 | 22 | 67 | பட்டாணி | 170 | 175 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 190 | 298 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 134 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 40 | 44 | 70 | புருக்கோலின் | 180 | 200 |
| 15 | சி.வெங்காயம் ( புதியது/பட்டறை) | 35 | 40 | 71 | பென்னி பீன்ஸ் | 50 | 55 |
| 16 | பெ.வெங்காயம் | 47 | 50 | 72 | குடமிளகாய் | 48 | 58 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 20 | 25 | 73 | | | |
| 18 | பச்சை மொச்சை | 38 | 44 | 74 | பஜ்ஜி மிளகாய் | 35 | 40 |
| 19 | முருங்கை | 35 | 38 | 71A | | | |
| 20 | தேங்காய் | 34 | 36 | | | | |
| 21 | | | | | | | |
| 22 | வாழைக்காய் | 40 | 44 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | | | | 75 | எலுமிச்சை | 120 | 130 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 75 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 42 | 48 | 78 | பப்பாளி | 30 | 35 |
| 28 | கறிவேப்பிலை | 30 | 35 | 79 | மாதுளை | 150 | 200 |
| 29 | கொத்தமல்லி | 75 | 80 | 80 | திராட்சை | 100 | 110 |
| 30 | புதினா | 7 | 8 | 81 | மாம்பழம் | 100 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் / காலா | 200 | 240 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்சு | 90 | 100 |
| 33 | சுக்கிட்டி&வெந்தயம் | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 12 | 15 | 85 | அன்னாசி பழம் | 70 | 75 |
| 35 | சிறுகீரை | 12 | 15 | 86 | சீதாப்பழம் | 70 | 75 |
| 36 | பாலாக்கு | 12 | 15 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசனி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 85 | 90 |
| 40 | கோவக்காய் | 25 | 30 | 91 | பூவன் | 50 | 55 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 55 | 60 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 55 | 60 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 28 | 32 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 28 | 32 | 96 | நேந்திரன் | 55 | 60 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 20 | 24 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 40 | 45 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 60 | 66 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 80 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கார்ன் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 28 | 30 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 30 | 35 | | | | |

# விவசாயிகளுக்கு மானாவாரி நிலக்கடலை சாகுபடி பயிற்சி

கிருஷ்ணகிரி, ஆக.29

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் பொம்மரசனப்பள்ளி கிராமத்தில் 40 விவசாயிகளுக்கு உள்மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது. இப்பயிற்சியில் 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கு தலைமை தாங்கிய வேளாண்மை உதவி இயக்குநர் சிவநதி, மானாவாரி நிலக்கடலை சாகுபடி முறையில் நிலம் தயாரித்தல் ஜிப்சம் இடுவதால் மண் இலகுவாகி நீர்பிடிக்கும் திறன் காற்றோட்டம் ஆகியவை மேம்படுத்தும் தொழில்நுட்பங்கள், வரப்பு பயிர், ஊடுபயிர் செய்வதன் பயன்கள், மண்ணின் வளத்தை மேம்படுத்த நுண்ணூட்ட உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றியும், காப்பீட்டுத் திட்டத்தின் முக்கியத்துவம் பற்றியும், விளக்குப்பொறியை அமைத்து அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்கும் முறை மேலும் விளக்குப்பொறி வைத்திருக்கும் பகுதியில் முட்டைக் குவியலை சேகரித்து அழிக்கும் முறை மற்றும் வேளாண்மைத் துறையில் கொடுக்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார்.

வேளாண்மை அலுவலர் சுருதி, உழவர் பயிற்சி நிலையம், கிருஷ்ணகிரி, மண் மாதிரி சேகரித்தலின் முக்கியத்துவம், மண் மாதிரி சேகரிக்கும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விதைநேர்த்தி செய்யும் முறை பற்றியும் தரமான விதைகளை தேர்ந்தெடுத்து விதைநேர்த்தி செய்து விதைகளை விதைப்பதின் மூலம் பயிக்ஷி விளைச்சலை அதிகபடுத்தலாம் எனவும், விவசாயிகளுக்கு விரிவாக விளக்கமளித்தார். மேலும் முன்னோடி விவசாயி சின்னதிம்மப்பா, இயற்கை விவசாயத்தில் செயற்கை உரங்களை தவிர்த்து இயற்கை உரங்கள் மூலம் விளைச்சல் அதிகப்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும், பஞ்சகாவியா, ஜீவாமிருதம் தயாரிப்பு பற்றியும் விளக்கமளித்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பாரதிராஜா இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து உழவன் செயலி பயன்கள் பற்றியும், அட்மா திட்ட செயல்பாடுகள் அதன் பயன்கள் பற்றியும் விளக்கமளித்தார். மேலும் இப்பயிற்சிக் கான கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த முறையில் பூச்சி நோய் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பத் துண்டு பிரசுரங்கள்வழங்கப்பட்டன.

# தேனீ வளர்ப்பு குறித்து வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்



மதுரை, ஆக.29

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டாரம், தென்கரை கிராமத்தில் திண்டுக்கல், காந்திகிராம பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இளங்கலை வேளாண்மை இறுதி ஆண்டு மாணவிகள் பேராஜெஸிந், இந்துராணி, கோமுகி, முத்துலட்சுமி, பபிதாஆகியோர் ‘ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின்’ கீழ் தேனீ வளர்ப்பு, அதன் முக்கியத்துவம் குறித்த தகவல்களை பள்ளி குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களிடம் பகிர்ந்தனர். மேலும் மாதிரி தேனீ பெட்டி செய்து, அதை வைத்து தேனீ வளர்க்கும் முறைகள், தேன் பிரித்தெடுக்கும் முறைகள் பற்றியும் விளக்கினர்.



# மண்வளம் மேம்பட பலப்பயிர் சாகுபடி

● பலப்பயிர் என்பது ஒரே வயலில் ஒரே சமயத்தில் ஏழுக்கும் மேற்பட்ட பயிர்களை ஒன்றாக விதைத்து அவை பூக்கும் பருவத்தில் மடக்கி உழுதால் மண்ணின் வளம் பெருகும்.

● பொதுவாக தானியங்களில் 2 வகை, எண்ணெய் வித்துகளில் 2 வகை, பயறு வகைகளில் 2 வகை, பசுந்தாள் 1 வகை ஒவ்வொன்றும் 1 கிலோ விகிதம், 7 கிலோ விதை ஒரு ஏக்கருக்கு போதுமானது.




● எள், சோளம், ஆமணக்கு, தட்டைப்பயிர், அகத்தி, கொள்ளு, கொளுஞ்சி, கேழ்வரகு, உளுந்து, கடலை, சூரியகாந்தி, பச்சைப்பயிர், தினை, பனிவரகு, சாமை மற்றும் மக்காச்சோளம் போன்றவை பலப்பயிர் சாகுபடிக்கு உகந்தவை.

● பருவப்பயிர்க்கு முந்தைய காலத்தில் கிடைக்கப்பெறும் மாதிரியினைப் பயன்படுத்தி பலப் பயிர்களைப் பயிரிட்டு அவற்றை மடக்கி உழுது அடுத்த பயிருக்கு உரமாக்குவது சிறந்ததொரு தொழில்நுட்பம்.

● இந்த முறையால் மண்ணின் வளம் காக்கப்படுவதோடு அடுத்த பயிருக்குத் தேவையான பயருணவுச் சத்துகள் எளிதில் கிடைக்கச் செய்திடலாம் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி, வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கூறியுள்ளார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# இராமநாதபுரம் மாவட்ட டிஜிட்டல் பண்ணை மானாவாரி நெல் விதைப்பிற்கான ஆடியோ கான்பரன்ஸ் - ஆயத்த பயிற்சி

இராமநாதபுரம், ஆக.29

இராமநாதபுரம் மாவட்ட மானாவாரி நெல் டிஜிட்டல் பண்ணை பள்ளி விவசாயிகளுக்கான ஆயத்த பயிற்சி அலைபேசி வாயிலாக (AUDIO CONFERENCE) ரீலையன்ஸ் பவுண்டேசன் சார்பில் 27.8.24 அன்று நடைபெற்றது. இதை துவக்கி வைத்து திட்ட மேலாளர் ஸ்ரீகிருபா பேசுகையில், நமது மாவட்ட த்தில் வழக்கத்திற்கு மாறாக அதிக மழை பெய்துள்ளது. இந்த சந்தர்ப்பத்தை பயனபடுத்தி தரமான நெல் விதைகளை தங்களுடைய பகுதியிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் வாங்கி பயன்படுத்த கேட்டுக் கொண்டார்.

இந்த பயிற்சியில் தொழில்நுட்ப வல்லுநர் சந்திரசேகரன் தனது உரையில், மானாவாரியில் விதைக்க கூடிய நெல் ரகங்களை (கோ 51, RNR , DELUXE PONNI , ஜோதிமட்டை TKM13) தேர்வு செய்து விதைகளை கடினப்படுத்தியும் (SEED HARDENING) (1 கிலோ விதைக்கு 10 கிராம் பொட்டாசியம் குளோரைடு + 1 லிட்டர் தண்ணீர் என்றளவில் ) 16 மணி நேரம் ஊற வைத்து பின் அவற்றை எடுத்து நிழலில் உலர்த்தி பின் பூஞ்சான விதை நேர்த்தி செய்ய கூறினார். பூஞ்சான விதை நேர்த்தி செய்வதால் விதை மூலமாக பரவும் நோய்களை கட்டுப்படுத்த முடியும் என்றார். மண் மாதிரி எடுக்காத விவசாயிகள் உடனடியாக மண் எடுத்து தங்களுடைய நிலத்தின் மண் வளத்தை ஆய்வு செய்து அதற்கேற்ப உரமிடுவதால் சாகுபடி செலவு கணிசமாக குறைக் கப்படுவதுடன் மண்வளமும் பாதுகாக்கபடும். எனவே இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்த திட வேண்டுமாய் கேட்டுக் கொண்டார்.

பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளின் பல்வேறுபட்ட சந்தேகங் களுக்கு தீர்வு கூறப்பட்டது. மேலும் விவசாயம் மற்றும் கால்நடை, வானிலை, மீன் வளர்ப்பு சார்ந்த சந்தேகங்களை உடனுக்குடன் தீர்வுகாண கட்டணமில்லாத அலைபேசிவாயிலாக (1800-419-8800) என்ற 11 இலக்க எண்ணில் தொடர்பு கொள்ள கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்வில் முன்னோடி பயிற்சி பள்ளி விவசாயிகள் சேவியர், இராம பாண்டியன், போதும்மணி, சசிக்குமார், சுகந்தி வசந்தி மணிமாறன் அய்யனார், ரமேஷ் செந்தில், மாலங்குடி விஜயன் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். பரமக்குடி, சத்திரக்குடி, கமுதி, திருவாடானை, திருப்புல்லாணி, கடலாடி, முதுகுளத்தூர் வட்டார விவசாயிகள் பங்கேற்றனர்.

நிகழ்ச்சிக்கான எற்பாடு மாவட்ட கள பணியாளர் லிபகா ராமு சிறப்பாக செய்திருந்தார்.

# மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# பூக்களில் இருந்து நறுமணம் எப்படி வருகிறது? தெரியுமா?



பூந்தோட்டங்களில் (மல்லிகை, ரோஜா, பிச்சி) போன்ற பூக்களிலிருந்து நறுமணம் நம்மை கட்டி போடும். மல்லிகையின் நறுமணம் ஆளைத்தூக்கும் என்றால் ரோஜாவின் மணமோ நம்முடைய மனதை மயக்கும் என்பது மிகையல்ல.

பூக்கள் என்றதும் நம் மனதில் வருவது அதனுடைய வண்ண வண்ண நிறங்களும் மனதையை மயக்கும் நறு மணம் தான். இலக்கியங்களில் கூட பூக்களை அதனுடைய நறுமணத்தை கவனத்தில் கொண்டு‘, நறுவீ ‘ என்று அழைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பூக்களில் ஏன் நறுமணம் உண்டாகிறது? தெரியுமா?**

எல்லாமே ஒரு காரணமாக தான். நறுமணமும் பல வண்ணங்களும் இருப்பதால் தான் மகரந்த சேர்க்கை நடைபெற தேனீக்கள், பூச்சிகள், பறவைகள், விலங்குகளை கவர தான். மலரின் மணம் அதன் பூவிதழ்களில் கசியும் ஒரு வகையான வேதி பொருளாகும். அவை காற்றினாலும் வெப்பத்தாலும் ஆவியாகி காற்றில் கலப்பதால் நறுமணம் எல்லா பகுதியிலும் பரவுகிறது.

அந்த நறுமணத்தை நோக்கி எல்லா பகுதியிலும் இருந்து பூச்சிகள், தேனீக்கள் வந்து அமர்ந்து பூந்தேனை உறிஞ்சி விட்டு, அடுத்த பூவுக்கு செல்லும்போது அதனுடைய கால்களில் ஒட்டிச் செல்லும். மகரந்த தூள்கள் அடுத்த மலரில் ஒட்டி இனவிருத்தி மகரந்த சேர்க்கை நடைபெறும். பகலில் பூக்கும் பூக்களைவிட இரவில் மலரும் பூக்களுக்கு நறுமணம் அதிகமாக இருக்கும்.

இந்த பூக்கள் பெரும்பாலும் இரவில் பளிச்சென தெரிய வெள்ளை நிறத்தால் தான் இருக்கும். அப்போது தான் இரவில் விட்டல் பூச்சிகளும் அந்து பூச்சிகளும் வரிசை கட்டி வலம் வரும். ஒவ்வொரு வகையான பூக்களுக்கும் ஒரு விதமான நறுமணம் உண்டு. இதனை தான் மலரின் VISITING CARD

என்று கூறலாம். எல்லாவிதமான பூக்களும் நறுமணம் தரும் என கருத வேண்டாம். கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒரு வகையான தாவரத்தின் பூக்கள் இறந்த உயிரினத்தின் உடல் அழுகிய நிலையில் எற்படும் துர்நாற்றம் போன்று வீசும்.

என்ன நறுமணத்தால் தான் அந்த தாவரத்தில் மகரந்த சேர்க்கை நடைபெற்று தரமான மகசூல் நமக்கு கிடைக்கிறது. பூக்களின் நறுமணத்தில் இவ்வளவு கதை இருக்கிறதா என நீங்கள் கேட்பது காதில் விழுகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# களை கட்டுப்பாடு மற்றும் சூரியகாந்தி கலப்பு பயிர் சாகுபடி குறித்த பயிற்சி



கன்னியாகுமரி, ஆக.29

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் வட்டார வேளாண்மை மற்றும் உழவ ர்நலத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயி களுக்காக களை மேலாண்மை மற்றும் சூரியகாந்திகலப்பு பயிர் சாகுபடி குறித்த பயிற்சி, திருவட்டார் வட்டாரம் பொன்மனை ஊராட்சியில் மங்கலம் கிராமத்தில் நடைபெற்றது. பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் ஆரோக்கிய மலஜெயன் தலைமை வகித்து, சூரியகாந்தி பயிரின் சிறப்பு மற்றும் வரப்பு களில் சூரியகாந்தி பயிரிட்டு நன்மை தரும் பூச்சிகளை எப்படி அதிகரிக்கலாம் என விளக்கினார். பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய இணை பேராசிரியர் ராஜ்பிரவீன், களை கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் ஊடுபயிராக பயிரிடஏற்ற பயிர்கள் குறித்த தொழில் நுட்பங்கள் விளக்கினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர்அருண், உழவன் செயலி பயன்பாடு மற்றும் உயிர் உரங்கள் பற்றியும் விவரித்தார். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. பயிற்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் கிருஷ்ண ஜான்சி மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் இராஜேஸ்வரி, சுனில்குமார் செய்திருந்தனர்.



இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஓசூர் வட்டாரத்தில் சென்னத்தூர் கிராமத்தில் பண்ணை மண் பாதுகாப்பு குறித்து ஒரு நாள் பயிற்சி

கிருஷ்ணகிரி, ஆக.29

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்கத் திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் சென்னத்தூர் கிராமத்தில் ஓசூர் வேளாண்மை உதவி இயக்குநரின் தலைமையில் குறைந்த உற்பத்தி திறன் உள்ள பகுதிகளில் ஊட்டச்சத்து பாதுகாப்பு மற்றும் பண்ணை மண் பாதுகாப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது. இந்த பயிற்சியின் போது வேளாண்மை உதவி இயக்குநர், அ.புவனேஸ்வரி, மண் வள மேலாண்மையின் முக்கியத்துவம், மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் பயன்கள் மற்றும் மானிய விபரங்கள் பற்றி விவசாயிகளுக்கு புரியும் வகையில் விளக்கி கூறினார்.

அதியமான் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம், அத்திமுகம் முனைவர் ஸ்ரீதரன், பங்கேற்று ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த உர நிர்வாகத்தில் பெறகூடிய இலாப முறைகள், பசுந்தாள் உரங்கள் மற்றும் பசுந்தழை உரங்களின் பயன்கள், முக்கியத்துவம், இயற்கை வேளாண்மை செய்வதன் நன்மைகள், பஞ்சகாவியா உரம் தயாரித்தல் மற்றும் பயன்கள் குறித்து விவசாயிகளுக்கு தெளிவாக விளக்கமளித்தார். ஓசூர் வேளாண்மை அலுவலர் த.ரேணுகா, விதைநேர்த்தியின் பயன்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் உயிர் உரங்களின் பயன்கள், பயன்படுத்தும் முறைகள் பற்றியும், வேளாண்மைத் துறையில் செயல்படும் மானியத்திட்டங்கள் பற்றியும், சொட்டுநீர் பாசனத்தின் முக்கியத் துவம், மானிய விவரங்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்தார்.

ஓசூர் உதவி வேளாண்மை அலுவலர் பாரதி, உழவன் செயலி பதிவு செய்வதின் முக்கியத்துவம், பயன்கள் பற்றியும், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும், இராகி, துவரை சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தர். அட்மா வட்டார தொழில்நுட்ப மேலாளர் சோ.சுகுணா, அட்மா திட்ட செயல்பாடுகள் பற்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம் செய்திருந்தார்.

# எண்ணெய் வித்து பயிர்களில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு!

1. நல்ல தரமான பூச்சி, நோய் தாக்காத விதைகளை தேர்வு செய்து விதைக்க வேண்டும்.

2. மழைக்குப் பின் கோடை உழவு செய்தல் வேண்டும். இதனால் பூச்சிகளின் கூட்டுப்புழுக்களை அழிப்பதோடு மண்வாழ் நோய் கிருமிகளையும் அழிக்க முடியும்.




3. உயர் விளைச்சல் மற்றும் பூச்சி, நோய்களுக்கு எதிர்ப்பு திறன் உள்ள ரகங்களை பயிரிட தேர்வு செய்ய வேண்டும். சான்றிதழ் பெற்ற விதைகளையே பயன்படுத்த வேண்டும்.

4. விதைப்பதற்கு முன் 4 கிராம் டிரைக்கோடர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் கொண்டு விதை நேர்த்தி செய்வதால் வேர் அழுகல் மற்றும் துரு அழுகல் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

5. பரிந்துரைக்கப்பட்ட உளவியல் முறைகளான நில தயாரிப்பு, விதை அளவு, இடைவெளி, விதை கடினப்படுத்துதல், பயிர் எண்ணிக்கை, களை நிர்வாகம், நீர் மற்றும் உர மேலாண்மை முறைகளை கடை பிடிக்க வேண்டும். வயலிலும், வயல் வரப்புகளிலும் எப்பொழுதும் களை இல்லாமல் பார்த்துக் கொள்வதன் மூலம், பூச்சிகளின் பெருக் கத்தை தடுக்கலாம்.

6. வயல்களின் ஓரங்களில் பூச்சிக்கவர்ச்சி பயிரான சோயா மொச்சை மற்றும் கம்பு பயிர் பயிரிடுவதால் நிலக்கடலையில் சுருள் பூச்சியின் சேதம் குறைகிறது. மேலும் புரோட்டீனியாவின் கவர்ச்சி பயிரான ஆம ணக்கை வயல் ஓரங்களில் பயிரிடுவதால் பூச்சியின் முட்டைகளையும் அதிலிருந்து வெளிவரும் புழுக்களை சேகரித்து அளிக்கலாம்.

7. நிலக்கடலையுடன் ஊடுபயிராக உளுந்து அல்லது துவரை அல்லது கம்பு விதைப்பதால் பூச்சி தாக்குதலை குறைக்க முடியும்.

8. இறவை பயிரில் நீர் தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்வதன் மூலம் சுருள் பூச்சி, கரையான், வேர்ப்புழு போன்ற பூச்சிகளின் தாக்கு தலை குறைக்கலாம்.

9. வயலில் சிவப்பு கம்பளிப்பூச்சி, புரோட்டீனியா புழு ஆகியவற்றின் இலைகளில் உள்ள முட்டை குவியல்கள் மற்றும் இளம் பருவ புழுக் களையும் பொறுக்கி அழிக்கலாம்.

10. பருவ மழைக்குப் பின் வேர்ப்புழுக்களின் தாய் வண்டுகளை கவர்ந் தழிக்க ஏதுவாக வயலில் ஆங்காங்கே வேம்பு, கருவேல், தீக்குச்சி மரம் போன்றவற்றின் கிளைகளை நட வேண்டும். பின்னர் அவ்வண்டு களை கிளைகளிலிருந்து பொறுக்கி அழிக்கலாம்.

11. வயிலை சுற்றி 30 செண்டிமீட்டர் ஆழமும் 25 செண்டிமீட்டர் அகலத்திற்கு பள்ளம் வெட்டுவதன் மூலம் ஒரு வயலில் இருந்து மற்ற வயல்களுக்கு சிவப்பு கம்பளிப்பூச்சி,புரோட்டீனியா புழு போன்றவை ஊர்ந்து செல்வதை தடுக்கலாம்.

12. விளக்கு பொறி அமைத்து பச்சைக்காய் புழு அந்து பூச்சி, சிவப்பு கம்பளிபூச்சி, சுருள் பூச்சி, புரோட்டீனியா பூச்சி வேர்ப் புழுக்களின் வண்டுகளை போன்றவற்றை கவர்ந்திழுத்து கட்டுப்படுத்தலாம். மாலை 7 மணியில் இருந்து 11 மணி வரை விளக்கு பொறி எரிந்தால் போது மானது. இதனால் வயலில் உள்ள பூச்சிகளின் நிலையை கண்காணிக் கவும், கவர்ந்திழுத்து அளிக்கவும் இயலும் என சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் செல்வம் தெரிவித்தார்.



Stanes
BIO NEMATON
Bio Pesticide
Paecilomyces lilacinus
பயோ நெமட்டான்
பயிரின் வேர்களை தாக்கும் நூற்புழு பிரச்சனையா?
பயன்படுத்துவீர்...
பயோ நெமட்டான்
"நூற்புழுக்களின் எதிரி"
இது வேர்களைத் தாக்கும் தீமை செய்யும் நூற்புழுக்களையும் அதன் முட்டைகளின் செயல்பாட்டையும் தடுக்கிறது.
அரோக்கியமான வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது.
பூஞ்சாண (அ) பாக்டீரியா நோய்கள் வரும் அபாயத்தை குறைக்கிறது.
மேலும் நல்ல மகசூல் கிடைக்க வழிவகை செய்கிறது.
வேர் முடிச்சுகள்
வேர் வீக்கம்
வேர் அழுகல்
டி ஸ்டேன்ஸ் அண்ட் கம்பெனி லிமிடெட்
8/23-24, ரேஸ் கோர்ஸ்,
கோவை-641018.
www.tstanes.com
84899 04949
தமிழ்நாடு மேலாளர் : 91 93449 14955
கோவை, ஈரோடு : 91 93449 14956
சேலம் : 91 93449 14948
திருச்சி : 91 93449 14943
மதுரை : 91 93449 14935
வேலூர் : 91 93449 14938

# காண்டாமிருக வண்டு கட்டுப்படுத்தும் தொழில்நுட்பம்!

தென்னை பயிரிடப்படும் எல்லா இடங்களிலும் காண்டாமிருக வண்டுகள் காணப்படும். இவை தென்னையின் எல்லா வளர்ச்சி பருவங்களிலும் தாக்குதலை ஏற்படுத்தி நேரடியாகவும், மறை முகமாகவும் மகசூல் இழப்பை ஏற்படுத்துகின்றன. தோப்பின் ஓரத்தில் உள்ள மரங்கள். வீரிய ஒட்டு ரக மரங்கள், கம்போஸ்ட் மற்றும் எருக்குழிகளுக்கு அருகில் உள்ள மரங்கள் மற்றும் சரியாகப் பராமரிக்கப்படாத தோப்பில் உள்ள மரங்களை இவ்வண்டுகள் அதிகமாக தாக்குகின்றன. இதன் தாக்குதலால் சுமார் 10 சதம் வரை மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. இவை தென்னை தவிர, பாக்கு, பனை, எண்ணெய்ப்பனை, ஈச்சை, பேரீட்சை போன்ற பனை வகை மரங்களையும் தாக்குகின்றன.

**சேத அறிகுறிகள்**

இளம் கன்றுகளையும், வளரும் மரங்களையும் வளர்ச்சி யடைந்த காண்டாமிருக வண்டுகள் தாக்குகின்றன. இவ்வண்டுகள் மரத்தின் நடுக்குருத்தில் மட்டை இடுக்கில் இருந்து கொண்டு, வெளிவரும் குருத்து மட்டையை கடித்துத் தின்னும். வெளிவந்த குருத்தானது விசிறி போல முக்கோண வடிவில், கத்தரிக்கோலால் கத்தரித்துவிட்டது போல காணப் படும். இளம் கன்றுகளை தொடர்ந்து காண்டாமிருக வண்டு தாக்கினால் அந்தக் கன்றுகளானது காய்ந்து விடும். அதே போல் வளர்ந்த மரங்களில் வளர்ச்சியானது குன்றிவிடும்.

**வாழ்க்கை பருவம்**

தாய் வண்டானது தோப்பிற்கு அருகில் உள்ள எருக்குழி, குப்பைக் கிடங்கு, மண்புழு உரத்தொட்டிகள் மற்றும் தென்னை நார்க்கழிவுகளிலும் முட்டைகளை இட்டுச் செல்கின்றன.

புழுவானது மஞ்சள் கலந்த வெண்மை திறத்துடன், பழுப்பு நிறத் தலையுடன் 'ளீ' வடிவத்தில் காணப்படும். புழுவானது குப்பை கிடங்குகளிலுள்ள கழிவுகளை உண்டு வளர்ச்சியடைந்த பின் கூட்டுப்புழுவாக மாற இவை எடுத்துக்கொள்ளும் காலம் 75 முதல் 190 நாட்கள் ஆகும். வண்டானது கருப்பு நிறத்துடனும் மேற்பரப்பு வழுவழுப்பாகவும் காணப்படும்.

ஆண் வண்டிற்கு கொம்பானது பெண் வண்டை விட பெரியதாக இருக்கும் வண்டின் மொத்த ஆயுட்காலம் 3 முதல் 9 மாதங்கள் ஆகும்.

## மேலாண்மை முறைகள்

தோப்பை சுத்தமாக பராமரிக்க வேண்டும். தோப்பில் பட்டுப் போன தென்னை மரம் இருந்தால் அதை முழுவதுமாக அப்புறப்படுத்தி அழிக்க வேண்டும்.

எருக்குழிகளில் காணப்படும் காண்டாமிருக வண்டின் முட்டை புழு, கூட்டுப்புழு மற்றும் வண்டுகளை பொறுக்கி அழிக்கவும்.

எருக்குழியில் பச்சை மஸ்கார்டின் என்ற மெட்டாரைசியம் பூஞ்சாணத்தை தண்ணீரில் கரைத்து தெளித்தும் (5X10' வித்துக்கள்/மீ') காண்டாமிருக வண்டின் புழுக்களை அழிக்கலாம்.




நீண்ட இரும்பு கம்பிகளைக் கொண்டு தென்னை மரத்தின் குருத்துகளின் இடுக்கில் உள்ள வண்டினை குத்தி எடுத்து அழிக்கலாம்.

பச்சையான தென்னை மட்டைகளை நீளவாக்கில் பிளந்து, பிளந்த பாகத்தில் தென்னங்கள்ளை ஊற்றி தென்னந்தோப்பில் ஆங்காங்கே வைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.

நாப்தலீன் உருண்டைகளை மரத்திற்கு மூன்று என்ற அளவில் கீழ் மட்டை இடுக்குகளில் வைத்து வண்டுகளை விரட்டி அடிக்கலாம். வண்டுகளின் தாக்குதலைத் தடுக்க மூன்று அந்துருண்டைகளை நடுக்குருத்தைச் சுற்றியுள்ள மூன்று இலை மட்டை இடுக்குகளில் வைக்கவும்.

இளம் மரம் ஒன்றுக்கு இரண்டாம் மற்றும் மூன்றாம் இலை இடுக்குகளில் வேப்பங்கொட்டை தூள் + மணல் (1:2) கிராம் என்ற விகிதத்தில் கலந்த கலவையை 150 இட வேண்டும் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் வேலு தெரிவித்தார்.

# தரமான நெல் விதைகளைப் பயன்படுத்தி அதிக மகசூல் பெற கரூர் விதை ஆய்வு துணை இயக்குநர் தகவல்

கரூர், ஆக.29

கரூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு நல்ல மழைபொழிவு ஏற்பட்டதன் காரணமாக காவேரி மற்றும் அமராவதி ஆறுகளின் பாசனப் பகுதிகளிலும் மற்றும் தோட்டக்கால் பகுதிகளிலும் நெல் சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். பயிர் சாகுபடிக்கு தேவையான சான்று பெற்ற விதைகள் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்களில் போதுமானஅளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்த கரூர் விதை ஆய்வு துணை இயக்குநர் வி.மீனாகுமாரி, விவசாயிகள் சான்று பெற்ற விதைகளையே பயன்படுத்தி உயர் விளைச்சலை பெற வேண்டும்.

விதை நெல் வாங்கும் பொழுது விவசாயிகள் அரசு உரிமம் பெற்றவிதை விற்பனையாளர்களிடமிருந்து மட்டுமே வாங்க வேண்டும். அவ்வாறு விதைகளை வாங்கும் போது விதைப் பைகளில் உள்ள பயிர் சாகுபடி செய்யப்படும் பருவம், இரகம், குவியல் எண், காலாவதி நாள் ஆகியவைகளை சரிபார்த்து வாங்க வேண்டும் எனவும் வாங்க கூடிய விதைகளுக்கு விதை முளைப்புத் திறன் அறிக்கை, பதிவுச் சான்றிதல் உள்ளதா என சரிபார்த்து வாங்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.



மேற்கண்ட விவரங்கள் இல்லாத விதைகளையும் மற்றும் அரசு உரிமமற்ற விதை விற்பனையாளர்களிடமிருந்து பெறப் படும் விதை களை விவசாயிகள் பயன்படுத்தும் பட்சத்தில் முளைப்புத்திறன் குறைவதோடு பூச்சி நோய் தாக்குதல் அதிகமாகி மிக குறைவான விளைச்சலால் கடுமையான மகசூல் இழப்பு ஏற்பட வழி வகுக்கும் அரசு உரிமம் பெறாமல் சான்று பெறாத நெல் தானியத்தை விை தஎன்ற பெயரில் விற்பனை செய்பவர்களிடம் வாங்கி சாகுபடி செய்வதால் கலப்பு அதிகமாவதுடன் மற்றும் வீரியத்தன்மை குறைவதால் பெரும் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவித்து உள்ளார். இதனைத் தவிர்க்க,விவசாயிகள் சான்று பெற்ற விதைகளை அரசு அங்கீகாரம் பெற்ற விதை விற்பனை நிலையங்களிலிருந்து வாங்கி பயன் படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

அரசு உரிமம் பெற்ற விதை விற்பனையாளர்கள் தங்கள் விற்பனை நிலையங்களில் விதை இருப்பு பலகையையும், விதை இருப்பு பதிவேட்டையையும், விதை விற்பனை விலைப் பட்டியல்களையும் விதைச்சான்று மற்றும் அங்ககச் சான்று துறையால் வழங்கப்பபட்ட பதிவுச்சான்றிதல், பிற மாநிங்களி லிருந்து பெறப்பட்ட ஆதார நிலை மற்றும் சான்று நிலை நெல் இரகங்களுக்கு படிவம் 2 மற்றும் விதை முளைப்புத்திறன் அறிக்கையினையும் முறையாக பராமரிக்க வேண்டும். அவ்வாறு மேற்குறிப்பிட்ட ஆவணங்களை முறையாக பராமரிக் காத விதை விற்பனையாளர்கள் மீது விதைச்சட்டம் 1966,விதை விதிகள் 1968, விதைக் கட்டுப்பாட்டு ஆணை 1983 ஆகியவைகளின் படி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவித்ததாவது, அரசு உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக விதைகளை விற்பனை செய்வோர் மீது அத்தியாவசியப் பொருள்கள் சட்டம் 1955-ன் படி கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகள் விதை தொடர்பான புகார்கள் எழும் பட்சத்தில் விதை ஆய்வு துணை இயக்கநர் கரூர் அவர்களிடமோ அல்லது கரூர், தான்தோன்றிமலை, தெற்குத் தெருவிலுள்ள விதை ஆய்வு துணை இயக்குநர் அலுவலகத்திலோ நேரிடையாக புகார் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஆற்றல் இல்லா குளிர் அறை : செயல் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்




திண்டுக்கல், ஆக.29

திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழக வேளாண் மாணவர்கள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் சுருளிப்பட்டியில் தங்கி விவசாயிகளுக்கு வேளாண் தொழில்நுட்பம் குறித்து பயிற்சி அளித்து வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக விவசாயிகளுக்கான ஆற்றல் இல்லா குளிர் அறை (Zero Energy Cool Chamber) பற்றிய செயல் விளக்க நிகழ்ச்சி நடத்தினர். இது எரிசக்தி இல்லாமல் இயற்கை யாகவே காய்கறிகள் மற்றும் பழங்களை நீண்ட நாட்களுக்கு பாதுகாக்க உதவும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறை ஆகும். இந்நிகழ்ச்சியின் போது, ZECC-ன் கட்டமைப்பு, செயல்பாடு மற்றும் அதன் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்குச் செயல் விளக்கம் அளித்தனர்.

இந்த எளிமையான தொழில்நுட்பம் செங்கல் மற்றும் மணல் கொண்டு கட்டப்படும் ஒரு குளிர் அறை ஆகும். இது ஒரு வகையான நேரடி பண்ணை சேமிப்பு முறை. இதற்கு எந்த ஒரு ஆற்றலும் தேவையில்லை. இந்த தொழில் நுட்பம் ஆவியாகும் செயல்முறை கொள்கையின் அடிப்படையில் செயல்படுகிறது. இது வெளிப்புற வெப்பத்தில் 10 முதல் 15 டிகிரி செல்சியஸ் வரை குறைக்கும் மற்றும் 95% ஈரப்பதத்தை பராமரிக்கிறது.

இவை பழங்கள் மற்றும் காய்கறிகளின் வாழ்நாளை அதிகரிக்க உதவும். இதன் நீளமும் அகலமும் விவசாயிகளின் தேவைகளுக்கேற்ப வடிவமைத்துக் கொள்ளலாம். அங்குள்ள எளிய வளங்களைப் பயன்படுத்தி கட்டப்படுவதால் இது மிக எளிய மற்றும் சிக்கனமான சிறந்த தொழில்நுட்பம்.

விவசாயிகளும் ஆர்வத்துடன் பங்கேற்று, அதற்கான பயன்களைப் புரிந்து கொண்டனர்.

# கோலட்டி கிராமத்தில் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் பயிர் சாகுபடி மற்றும் நுண்ணீர் பாசன பயிற்சி

கிருஷ்ணகிரி, ஆக.29

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி வட்டாரத்தில் வேளாண்மைத் துறையின் மூலம் மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான கோலட்டி கிராமத்தில் பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் பயிர் சாகுபடி மற்றும் நுண்ணீர் பாசனம் பற்றி விவசாயி களுக்கு உள்மாவட்ட அளவிலான ஒரு நாள் பயிற்சி நடத்தப்பட்டது.

தளி, வேளாண்மை உதவி இயக்குநர், சி.முருகன், துவரை உற்பத்தியை பெருக்கவும், சாகுபடி செலவை குறைத்து, அதிக வருவாய் ஈட்ட வேளாண்மை துறையில் செயல்படும் மானியத் திட்டங்கள், வரப்பு பயிர் மற்றும் ஊடுபயிர் செய்வதன் பயன்கள் பற்றியும், விதை நேர்த்தி செய்வதன் முக்கியத்துவம் பற்றியும் விதை நேர்த்தி செய்யும் முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார்.

இப்பயிற்சியில் பயிற்சியாளராக கலந்து கொண்ட லட்சுமண குமார், பேராசிரியர் (வேளாண்மை), அதியமான் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், அத்திமுகம் மண் வளத்தை பாது காக்க இயற்கை உரங்கள் இடுவது குறித்தும், மண் வளத்தை பாது காக்க தக்கைப்பூண்டு இடுவதன் அவசியம் குறித்தும் விளக்கினார். மேலும் மண் பரிசோதனையின் முக்கியத்துவம், மண்ணில் உள்ள பேரூட்டசத்துகள், நுண்ணூட்ட சத்துகள் பயன்கள் பற்றியும் துவரை யில் 2 சதவீத டி.ஏ.பி கரைசல் தெளிப்பதன் பயன்கள், நுனி கிள்ளு வதால் பக்க கிளைகள் பெருகி அதிக காய்கள் பிடிக்கும் எனவும், பூ பூக்க தொடங்கும் பருவத்தில் ஏக்கருக்கு 2 கிலோ தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பயறு வொண்டரை 200 லிட்டர் நீரில் ஒட்டும் பசையுடன் கலந்து தெளிக்கும் போது பூ உதிர்வது குறைந்து அதிக மகசூல் கிடைக்கும் மற்றும் வறட்சியை வளரும் எனவும் மேலும் எண்ணெய் வித்துப் பயிர்களில் சாகுபடி தொழில் நுட்ப முறைகள் பற்றியும் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றியும் விவசாயிகளுக்கு விரிவாக கூறினார். சொட்டுநீர் பாசன நிறுவனம் சண்முகம் சொட்டுநீர் பாசன கருவிகளை பராமரிக்கும் தொழில் நுட்ப முறைகள் பற்றியும்நுண்ணீர் பாசனம் பெறுவதற்கு தேவை யான ஆவணங்களான ஆதார் கார்டு, சிட்டா, அடங்கள், வங்கி கணக்கு புத்தகம் ஆகியவற்றை கொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

உதவி தோட்டக்கலை அலுவலர் முரளி கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் கொடுக்கப்படும் இடுபொருள்கள், மானியத் திட்டங்கள் பற்றியும், தோட்டக்கலைத் துறையில் கொடுக்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும், இயற்கை வேளாண்மை ஊக்குவிக்கும் வகையில், மானியத் திட்டங்கள், உயிர் உரங்களின் பயன்பாடுகள் குறித்தும் விளக்கமளித்தார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் ர.சிந்தனா செய்திருந்தார்.


